எம்.சி.ஓ.பி எண்: 8209/2018 தேதி: 25.08.2025

மசா. : 1

பெயர் : கௌரி

க /பெ. : கலைமணி

வயது : 58

<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>

<u>முதல் விசாரணை</u>

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன் . மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 9 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன். மசாஆ 2,3 ஆவணங்கள் எதிர்தரப்பு ஆட்சிபேனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்து தேதி 27.10.2018. என் கணவர் விபத்தில் இறந்தார். நான் வீட்டு வேலை செய்கிறேன். விபத்து நடக்கும்போது என் கணவர் கொத்தனார் வேலை பார்த்தார். என் கணவர் மருத்துவமனையில் 66 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். என் கணவரின் தொழில் வருமானத்தை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை எ்னறால ்சரி. மருத்துவபில்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் அரசு மருத்துவமனையில்தான் சிகிச்சை பெற்றேன் என்பதால் நான் கோரும் மருத்துவ செலவு ரூபாய் 2 லட்சம் கிடைக்கதக்கதல்ல எ்னறால் சரியல்ல. என்கணவரின் இறப்பு தேதி 24.01.2022. மசாஆ 3 ஆவணத்தில் எனது கணவர் Cardiorespiratory arrest எனது கணவர் மருத்துவமனைக்கான சேர்ந்ததற்கான காரணம் என்றும் மற்றும் இறப்புக்கு காரணம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதில் அவ்வாறுதான் காணப்படுகிறது. மசாஆ 2 ஆவணத்தில் என் கணவர் பழுவான பொருட்களை தூக்கக்கூடாது என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதில்அவ்வாறுதான் கூறப்பட்டுள்ளது. இந்த விபத்து காயத்திற்கும், என் கணவரின் இறப்பிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. மனுவில் நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல. விபத்து என்னுடைய கணவரின் அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.

x

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.